**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 45/2023**

**Date :18.03.2026**

**வா.சா. 1- பீட்டர்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ேஹாட்டல் வைத்து நடத்தி வருகிறேன் மற்றும் மீன்பிடி தொழில் செய்து வருகிறேன். நான் ரியல்எஸ்டேட் தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கும் பத்தாங்குடி நாடார் எனபவரின் தந்தை பெயர் தான் சுப்பிரமணிய நாடார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பத்தாங்குடி நாடாருக்கு 4 குழந்தைகள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாசாஆ 1ல் கிழக்கு பக்க எல்லையாக ராஜேஸ்வரி அம்மாள் மனை என்றால் சரிதான்.

தெற்கு பக்க எல்லையாக செல்லையா நாடாரின் மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வடக்கு பக்கம் ஆப்ரகாம் மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கு இஸ்ரவேல் நாடார் மனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எல்கை தான் வாசாஆ 2 அந்தோணியப்பன் விலைக்கு வாங்கிய பத்திரத்தில் எல்கையாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 6 வில்லங்க சான்றிதழில் மேற்படி அந்தோணியப்பன் 26.12.2014 அன்று மார்ட்டின் மற்றும் பெப்சிலின் என்பவருக்கு விலைக்கு கொடுத்ததாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வாசாஆ 6 லும் மேற்படி எல்கைகள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ 6 கிழக்கற்றம் பங்கு ஒன்றுக்கு 10 ½ சென்டுக்கு சமமான 4573.8 சதுர அடி

காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்தோணியப்பன் மேற்படி சொத்தை விலைக்கு கொடுப்பதற்கு முன்பாக 31.03.2006 அன்று ஹெக்சிதீபா என்பவருக்கு 3 சென்ட் இடத்தை விலைக்கு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் 27.07.2006 அன்று செல்வி என்பவருக்கு 2 சென்ட் இடத்தை விலைக்கு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சொத்துக்களை விற்கயில் அந்தோணியப்பனிடம் தனது கைவசம் 8 ½ சென்ட் இருப்பதாக ஆவணங்களில் குறிப்பிட்டு தான் விலைக்கு கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்தோணியப்பன் எனக்கு சொத்தினை விலைக்கு கொடுப்பதற்கு முன்பாகவே அவர் கூடுதலாக 15 சென்ட்டை விற்று விட்டார் என்றால் சரியல்ல.

நான் அந்தோணியப்பனோடு கூட்டு சேர்ந்து சொத்தினை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 1ம் பிரதிவாதியாக கட்சி சேர்க்கப்பட்ட எஸ்தர் என்பவர் 6 சென்ட் சொத்தை தேவஅதிசயம் என்பவரிடம் இருந்து விலைக்கு வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி தேவஅதிசயத்தின் தந்தை பெயர் தான் இஸ்ரவேல் நாடார் என்றால் சரிதான். மேற்படி இஸ்ரவேல் நாடாருக்கு வழக்கு பட்டிகை சொத்தில் 17 சென்ட் உரிமை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மேற்படி தேவஅதிசயம் 1ம் பிரதிவாதியின் சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள பாதை போட்டு தான் மேற்படி சொத்தை 1ம் பிரதிவாதியான எஸ்தருக்கு விலைக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. அது என்னுடைய பூமி. மேற்படி கிழக்கு பக்கம் உள்ள பாதையில் ஒரு போர்வெல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிழக்கு பக்கம் உள்ள பாதையில் ஒரு போர்வெல் உள்ளது. அதிலிருந்து தான் 1ம் பிரதிவாதி வீட்டிற்கு தண்ணீர்

எடுக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் எனக்கு விலைக்கு கொடுத்த அந்தோணியப்பனுக்கு வழக்கு பட்டிகை சொத்தில் 2 சென்ட் மனை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி 2 சென்ட் இருப்பதற்கான தோராய வரைபடம் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பட்டா தாக்கல் செய்துள்ளேன்.

1ம் பிரதிவாதி வீட்டின் கேட்டை அகற்றுவதற்கான பரிகாரம் கேட்டுள்ளேன் . மேற்படி கேட் எங்கே உள்ளது அதன் வீதி , உயரம் ஆகிய விவரங்கள் குறித்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து ஒன்று வழக்கு பட்டிகை சொத்தில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்தை அடையாளம் காண இயலாது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள வாசாஆ 4,5,7 மற்றும் 8 வருவாய் துறையினரை வசப்படுத்தி வாங்கியுள்ள ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள 2 சென்ட் மனை 1ம் பிரதிவாதியின் முன்ஜென்மிக்கு கிடைத்து அவர் 1ம் பிரதிவாதிக்கு போக்குவரத்து அவகாசமாக எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி 2 சென்ட் பாதை வழியாக 1ம் பிரதிவாதிக்கு போக்குவரத்து செய்ய முழு உரிமை உண்டு என்றால் சரியல்ல.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இவ்வழக்கில் நான் கோரியுள்ள 2 சென்ட் நீளம் மற்றும் அகலம் என்ன என்றால் 10½ அடி வீதி , நீளம் தெரியவில்லை. சர்வேயர் அளக்கயில் 2 சென்ட் இருந்தது. சர்வேயர் யார் என்றால் பெயர் தெரியாது, பக்கத்து ஊரில் உள்ள நபர். மேற்படி சர்வேயர் அளந்ததற்கான வரைபடம் உள்ளதா என்றால் இல்லை. எந்த தேதியில் மேற்படி சர்வேயர் அளந்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை 2021ம் வருடம் 6ம் மாதம். மேற்படி சர்வேயர் வைத்து அளந்ததற்கான விவரங்கள் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால்

சரியல்ல. நான் விலைக்கு வாங்கிய பத்திரம் 04.04.2021 தேதியிட்டது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண்ணில் யார் யாருக்கு எத்தனை விஸ்திரணம் கொண்ட சொத்து இருக்கிறது என்ற விவரம் தெரியுமா என்றால் அந்தோணியப்பர் சொத்திற்கான விவரம் மட்டும் தான் தெரியும்.

என்னிடம் காட்டப்படும் ஆவணம் இவ்வழக்கின் மனு எண் 2/2023 ல்எ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்ட 2 ம் பிரதிவாதி எதிருரையுடன் தாக்கல் செய்துள்ள தோராய வரைபடம் என்றால் சரிதான். அதில் என்னுடைய பூமி உள்ளது. **மேற்படி தோராய வரைபடம் பிவாசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 2 ம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய ஆவணத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. எனது சொத்தில் காம்பவுண்ட் சுவர் எழுப்பியுள்ளேனா என்றால் எழுப்பியுள்ளேன். இடித்து விட்டார்கள். மேற்படி காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கான அப்ரூவல் வாங்கினேனா என்றால் இல்லை.

காம்பவுண்ட் சுவர் இடிக்கபட்ட தேதி என்ன என்றால் தேதி ஞாபகம் இல்லை 2023. நான் 2 சென்ட் சொத்தை அந்தோணியப்பனிடமிருந்து தான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் இவ்வழக்கின் மனு எண் 2/2023 ல்எ.ம.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்பட்ட 2 ம் பிரதிவாதி எதிருரையுடன் தாக்கல் செய்துள்ள அந்தோணியப்பன் ெஹக்சிதீபாவிற்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் நான் படித்து பார்க்கவில்லை.

மேற்படி ஆவணத்தில் 10 ½ சென்ட் இருந்தாலும் கிடப்புபடி 8 ½ சென்ட் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது ஆகையால் நான் படித்து பார்க்கவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 27.07.2006 அன்று செல்வி என்பவருக்கு அந்தோணியப்பன் 2 சென்ட் சொத்து விலைக்கு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி

ஆவணத்தில் 10 ½ சென்ட் இருந்தாலும் கிடப்புபடி 8 ½ சென்ட் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்தோணியப்பன் அவருக்குரிய 8 ½ சென்ட்டை விலைக்கு கொடுத்த பின்பு நான் மோசடியாக கிடப்பில் இ ல்லாத ஒரு மோசடி ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிவாசாஆ 1ல் 2ம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய சொத்திற்கு கிழக்கு பக்கம் ஒரு பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கு பக்கம் தான் பாதை உள்ளது. நான் இவ்வழக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் வழக்கு பட்டிகை சொத்தினை பார்வையிடுவதற்காக நீதிமன்ற மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் பத்தாங்குடி நாடாருக்கு வாய்மொழியாக பாகபிரிவினை மூலம் பாத்தியப்பட்டது அது எந்த தேதி என்றால் தெரியாது. இவ்வழக்கில் அந்தோணியப்பனிடமிருந்து கிரையம் பெற்ற நபர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

நான் கிரையம் பெற்ற இடத்தில் காம்பவுண்ட் சுவர் இருப்பதாக வாசாஆ 1ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய சொத்தினை அவர் தனியாக உட்பிரிவு செய்து உபயோகித்து வருகிறார் என்றால் சரியல்ல. வாசாஆ 1 ஆவணம் மோசடியான ஆவணம் அதன் அடிப்படையில் எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது எனக்கு விலைக்கு கொடுத்த அந்தோணியப்பருக்கு நான் கோரக்கூடிய 2 சென்ட் எவ்வித உரிமையும் கிடையாது. நான் பிரதிவாதிகளை கஸ்டப்படுத்தும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**